செய்தி வெளியீடு எண்:575 நாள்:07.08.2021

**<u>முத்தமிழறிஞர் கலைஞர் நினைவாக தலமரக்கன்று நடும் திட்டம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்</u>**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (7.8.2021) சென்னை, நுங்கம்பாக்கத்தில் உள்ள இந்து சமய அறநிலையத்துறை தலைமையிட வளாகத்தில், முத்தமிழறிஞர் கலைஞர் நினைவாக ஒரு இலட்சம் தலமரக்கன்றுகள் நடும் திட்டத்தைத் தொடங்கி வைக்கும் அடையாளமாக, நாகலிங்க மரக்கன்றை நட்டுத் திட்டத்தைத் தொடங்கி வைத்தார்.

இந்து சமய அறநிலையத்துறை பக்தர்களின் வசதிக்காகப் பல்வேறு நலத்திட்டங்களைச் சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறது. அந்த வகையில், தமிழ்நாட்டில் கோயில்களுக்குச் சொந்தமான நிலங்களில் ஒரு இலட்சம் தலமரக்கன்றுகள் நடுவதற்கான திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. கோயில் தோன்றுவதற்கு முன்பே இருப்பதால், அம்மரம் தலமரம் எனப் போற்றப்படுகிறது. திருக்கோயில்களில் அந்தந்தத் தலமரங்களான மாமரம், புன்னை, வில்வம், செண்பகம், மருதம் போன்ற மரங்கள் நட்டுப் பராமரிக்கப்படும்.

இத்தகைய பெருமைமிகு தலமரங்களைப் போற்றிப் பாதுகாக்கும் நோக்கில் திருக்கோயிலுக்குச் சொந்தமான இடங்களில் ஒரு இலட்சம் தலமரக்கன்றுகள் நடும் திட்டம் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தை மூன்று மாதக் காலத்திற்குள் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் திரு. துரைமுருகன், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் திரு.பி.கே. சேகர்பாபு, மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பி. சந்தரமோகன், இ.ஆ.ப., இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் திரு.ஜெ. குமரகுருபரன், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

••••••••

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9